International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 02 April to June 2021 www.irjtsjournal.org

# திருக்குறள் கூறும் காதல் அறத்தின் மூலம் பாவ வெளிப்பாடு

*திருமதி சோபனா தர்மேந்திரா Mrs. Shopana Tharmenthira*
*முதுநிலை விரிவுரையாளர் Senior Lecturer*
*நடனத்துறை, Department of Dance*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், University of Jaffna*
*இலங்கை, Srilanka*

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்க்கையில் மனித மனங்களை வளப்படுத்தி அறவழிப்பட்ட வாழ்வியல் சமுதாயத்தை தோற்றுவிப்பதே திருக்குறளின் நோக்கமாகும். மனம் மாசின்றி தூய்மையாக வாழும் வாழ்க்கை உன்னதமானது. அதுவே அறங்களின் முழுமையான மானிட வாழ்க்கை என்கிறார் திருவள்ளுவர். மனத்தூய்மை,ஈகை, காதல் என்னும் தூய நெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணரத்தியவர் திருவள்ளுவர். திருக்குறள் அறம், பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித பண்புகளை விளக்குகிறது. மனிதர்களின் வாழ்வியல் நெறிகளை உணர்த்தும் கோட்பாடாக வள்ளுவர் மூன்று அறங்களை பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

1.ஆன்மீக அறம் 2. ஈதல் அறம் 3.காதல் அறம்

ஆன்மீக அறம்:- வள்ளுவம் கடவுளை நம்புகிறது. அது பேரறிவு, தூய்மையான அறிவு, குணங்களின் திருவுரு, இன்பத்தின் திருவுரு, அன்பின் திருவுரு ஆன்மீக அறத்தின் அடையாளம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது.

ஈதல் அறம்:- பிறருக்கு கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகி விடுகிறான். ஈகைக்குணமே உயிரின் பெறுமானம்.இவைகளேஈதல் அறமாகும்.

காதல் அறம்: காதலையும் ஆண், பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகியவற்றை இனிமை பயக்கப் பாடி அன்பெனும் நெறிக்குள் மனங்களின் சங்கமத்திற்குள் மாசுபடாத வாழ்வியல் படிநிலைகளை வடித்துத் தந்துள்ளார். பிறர் மனை நயத்தலையும் பரத்தையர் உறவையும் பெரும் குற்றமாகக் கூறி, அன்புடைய காமத்தை சமுதாய அறமாகத் தந்துள்ளார். காதலர்களின் ஒத்த அன்பு மாறா அன்பு வாழ்வை நன்வழிப்படுத்துகிறது. வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகிறது. பாதநாட்டியத்தில் பாவம் என்பது உணர்ச்சிகளின் தோற்றப்பாட்டை முகத்தினால் வெளிப்படுத்துவது ஆகும். இவ்வாறு கூறப்படும் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் காதல் அறமானது பரதநாட்டியத்தில் உள்ள பாவங்களின் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்பதை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளது. அதாவது பாவங்களில் நிலையாக உறுதி பெற்று மனத்தில் நிற்கும் பாவம் ஸ்தாயி பாவமாகும். அந்தவகையில் திருக்குறள் கூறும் காதல் அறத்தின் மூலம் பரதநாட்டியத்தில் பாவ வெளிப்பாட்டை எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்பதை விளக்குவதாக இவ்வாய்வுத் தலைப்பு அமையப் பெறுகிறது.திருக்குறள் சுட்டும் காதல் அறத்தின் மூலம் காதலர்களின் உறவுநிலை மூலம் பாவப் புலப்பாட்டை எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். திருவள்ளுவரின் காதல் அறமானது பரதநாட்டிய பாவ வெளிப்பாட்டிற்கு காதலன் காதலி உறவு நிலை இன்றியமையாதது. அதாவது பரதநாட்டியத்தில் நாயகன் நாயகி பாவம் வெளிப்படுத்துவதற்கு திருக்குறளில் கூறப்பட்ட தலைவன் தலைவி உறவு நிலை அடித்தளமாக முன்மாதிரியாக அமைகிறது என்பதே இவ்வாய்வின் கருதுகோள் ஆகும்.. இவ்வாய்வானது

விவரண ஆய்வு முறையையும், அதாவது வாழ்வியல், காதல் அறம் , பாவம் என்பவற்றை விவரிப்பதால் இது விவரண ஆய்வு முறையையும், திருக்குறளில் கூறப்படும் காதல் அறத்தை பரதநாட்டிய பாவ வெளிப்பாட்டின் மூலம் ஒப்பீட்டு ஆராய்வதால் ஒப்பீட்டாய்வு முறையையும் கொண்டு விளங்குகிறது. திருக்குறள் மற்றும் ஏனைய நூல்கள் ஆய்வின் மூலமாக விளங்குகின்றன. எல்லையாக திருக்குறளில் கூறப்படும் காதல் அறத்தை ஸ்தாயி பாவங்கள் எட்டு வகை மூலம் மட்டுமே ஆராய்வதாக அமையப்பெற்றுள்ளது. காதல் அறமானது வாழ்வியலை வளப்படுத்துவதற்கு இத்தகைய திருக்குறள் கருத்துக்கள் மூலம் சமுதாயத்திற்கு பயனுடையதாக அமையும்.

**திறவுச் சொற்கள்** : 1.காதல் அறம் 2. பாவம் 3. சோகம்

**அறிமுகம்**

திருக்குறள் இல்லறம் என்னும் காதல் அறத்தைப் போதிக்கிறது. இக்காதல் அறமானது மானிட வாழ்க்கையில் இல்லறத்தானும் இல்லறத்தாளும் காதல் எனும் அன்பின் மூலம் வாழ்வைச் செம்மைப்படுத்தி நிலைநாட்ட வழிவகுக்கிறது. அந்தவகையில் இவ் இல்வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு காதலன், காதலி உறவு நிலையில் காதல் அறத்தின் மூலம் பாவ வெளிப்பாடு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை பின்வருமாறு அறியலாம்.

பாவம்

சுவையுணர்வு பெறத்தக்க உள்ளத்தின் தொழில் பாவம் ஆகும். ஒரு பொருள் விபாவத்தினால் தோன்ற அனுபாவத்தினால் சொல், மெய்பாடு முதலியவற்றால் பாவம் நன்கு செழித்து விளங்குமானால் அப்பொருள் பாவம் எனப்படும்[1]. பாவம் ஸ்தாயி, வியபிசாரி, சாதவீக விபாவம், அனுபாவம் எனும் வகைகளும் உண்டு. பாவம் எனும் விளக்கத்திற்கு பின்வரும் திருக்குறள் வரிச் சான்றுகளை நோக்கலாம்.

உள்ளக்குறிப்பு வெளிப்படும் இடம் முகம் ஆகையால் முகம் நோக்கியே உணரவேண்டும். தன்னை அடுத்த பொருளை காட்டுகின்ற பளிங்கு போல், ஒருவனுடைய உள்ளத்தில் மிகுந்திருக்கும் குறிப்பை(உணர்ச்சியை ) அவனுடைய முகம் காட்டும்.

1.“ அடுத்தடுத்து காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்”706

2. “முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்”707

மேற்குறிப்பிட்ட குறட்பாக்கள் பாவத்திற்கு வரைவிரக்கணமாக உள்ளன.

3. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”45

இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாயிருத்தல் வேண்டும் உன்பதும் அதற்கு அன்பும் அறனும் தேவை என்பதும் திருவள்ளுவர் கருத்து. அன்பு அறனில் ஒன்றுவது. அறக்கூறுகளில் சிறந்ததொன்று அன்பு. அன்பின் வழியே அறன் ஆக்கமுறலும் இல்வாழ்க்கையே இயற்கை வாழ்க்கை. இல்வாழ்க்கை காதலை அடிப்படையாகக் கொண்டது[2].

**ஸ்தாயி பாவ வெளிப்பாடு**

---

[1]ஶ்ரீராமதேசிகன்.எஸ்.என்(2001) “பரதநாட்டிய சாஸ்திரம்” உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.91

[2]கலியாணசுந்தரனார்.வி(1951) “திருக்குறள் விரிவுரை”, சாது அச்சுகூடம்,சென்னை, ப.44

**1. ரதி(காதல்)**

யான் காணாத போது என்னைக் கண்டு களவு கொள்கின்ற சிறு நோக்கும் இவளிடம் உள்ளது. யான் காணாத போது கண்டு,ஏதோ கருத்தை உட்கொண்டு நாணி இறைஞ்சுகிறாள். அதுதான் எங்களிடையே அன்பை வளர்க்கும் நீராகிறது. யான் நோக்கும்போது நாம் எதிர்நோக்காமல் நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்குகிறாள். யான் நோக்காத போது என்னை நோக்கித் தனக்குள் மகிழ்ககிறாள். என்று அவளுடைய கண் வாயிலாக அளந்தறிகிறான். இங்கு கண்ணால் காதல் கணை வீசப்படுகிறது. இதனால் காதலன் காதலி அன்பு புலப்படுகிறது. இக்காதல் அறத்தின் மூலம் ரதி எனும் ஸ்தாயி பாவம் வெளிப்படுகிறது. காதல் உறவை துல்லியமாக எடுத்துக் காட்டுவதால் ரதி எனும் ஸ்தாயி பாவம் வலுப்பெறுகிறது. இதனை பின்வரும் திருக்குறட்பாக்கள் தெளிவுபடுத்துகின்றன.

1. "கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
2. செம்பாகம் அன்று பெரிது"1092
3. "நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃ.தவள்

   யாப்பினுள் அட்டிய நீர்"1093

**2. ஹஸ(சிரிப்பு)**

1."கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்

இதுநகத் தக்கது உடைத்து"1173

இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து அழுகின்ற இது நம்மால் சிரிக்கத்தக்க இயல்பினையுடைத்து[3].

2."யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்

யாம்பட்ட தாம்படா வாறு"1140

யாம் உற்ற நோய்களைத் தாம் உறாமையால் அறிவில்லாதவர்கள் யாம் கண்ணால் காணுமாறு என்னைக் கண்டு சிரிக்கின்றனர்(செவிலிக்கு அறத்தொடு நின்று வைத்து, யான் நிற்குமாறு என்னை என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது[4]. மேற்குறிப்பிட்ட குறட் பாக்கள் ஹஸ எனும் ஸ்தாயி பாவத்திற்கு உதாரணங்களாகும்.

" யாங்கண்ணி…." எனும் குறளில் குறிப்பிட்ட தலைவனைப் பார்த்து நகைத்தலில் ஹஸ(சிரிப்பு) எனும் ஸ்தாயி பாவம் வெளிப்படுவதைக்காணலாம்.

**3. பய(ஐயம்)**

**" பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**

**வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்"( 40)**

[3]ஜகந்நாதன்.கி.வா(1963)"திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு",இராமகிருஸ்ணமிஸன் வித்யாலயம், கோயம்புத்தூர்,.ப.616

[4]மேலது ப.598).

பழிக்கு அஞ்சி பகுத்துண்ணும் இல் வாழ்க்கையின் வழி எப்பொழுதும் குறைபடாது.

“பழியஞ்சிப் பாத்தூண்” என்பது அன்பார்ந்த அறநெறியில் நின்று பெறுவதை பிறர்க்கு பகிர்ந்து அளித்து உண்ணுதல் எனும் பொருளைக் கொண்டது. பழிக்கஞ்சி வாழுதலே அறிவுடைமை. பழி பல வகையில் பிறக்கும். பழி பிறவாதவாறு வாழ்க்கை நடத்துவதே சிறப்பு. இங்கு குறிப்பிட்ட பழிக்கு அஞ்சி வாழ்வதில் பய எனும் ஸ்தாயி பாவம் நிலைத்திருப்பதைக் காணலாம். பழிக்கு அஞ்சி அன்பார்ந்த அறநெறியில் பகுத்துண்டு வாழ்தலைக் குறிப்பதாக மேலே குறிப்பிடப்பட்டுளள குறட்பா அமைகிறது.

**4. ஜுகுப்ஸா( வெறுப்பு)**

பரத்தையரைப்பற்றி திருவள்ளுவர் வரைவின் மகளிர் என்ற தலைப்பின் கீழ்ப் பரத்தையர் கூட்டத்தை இழித்துப் பேசுகிறார்.

“ நிறைநெஞ்ச மில்லவர் தோய் வர் பிற நெஞ்சிற்

பேணிப் புணர்பவர் தோள்”(917)

இங்கு வெறுப்பு எனும் ஸ்தாயி புலப்படுகிறது.

புறக்கணித்தவர்களையே மீண்டும் மீண்டும் நாடும் மனத்தால் அன்பு வளரும். மானம் இழந்தாலும் அன்பு வளரும் என்று காதல் வாழ்க்கை கற்பிக்கிறது. அன்பு வளர்ந்த நெஞ்சிற்கு வெறுப்பு என்பது முடியாது. வெறுப்பாக நெருங்கினாலும் விரும்புவதாகவே முடிகிறது. என்று காதல் வாழ்க்கை கற்பிக்கிறது. காதலன் பிரிந்து சென்ற போது நெஞ்சை கூறும் காதலியின் சொற்களில் இதைக் காணலாம். அவை வருமாறு

**“செற்றார் எனக்கை விடல் உண்டோ நெஞ்சேயாம்**

**உற்றார் உறாஅ தவர”**(1245)

**5. க்ரோத( கோபம்)**

**“கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தயைக்**

**காட்டிய சூடினீர் என்று”**

காதலர் ஒரு மாலையைச் சூடிச் சென்றான். அந்த மாலை வேற்று நிலத்துக் கோட்டுப்பூக்களால் ஆகியது. அதைக் காதலி கண்டதும் ஊடுகிறாள். உன் காதலி யாரோ ஒருத்திக்கு இந்த அழகைக் காட்ட வேண்டும் என்றுதான் சூடியிருக்கிறாய் என்று ஊடுகிறாள். காதலன் மேல் கோபம் கொள்கிறாள் காதலி இங்கு “க்ரோத” எனும் ஸ்தாயி பாவம் புலப்படுகிறது.

காதலிடத்தில் தவறு கண்டுதான் இவ்வாறு காதலி ஊடுகிறாளா? அவளே கூறுகிறாள் அவரிடத்தில் தவறு இல்லை ஆயினும் அவர் மென்மேலும் செய்கின்ற அன்பை விரும்பியே ஊடுருகின்றேன். நிலமும் நீரும் போல ஒன்றுபட்ட காதலர் வாழ்க்கையில் ஊடுவது தனி இன்பமாக இருக்கிறது. தேவருலகம் அத்தகைய இன்பம் தருமா என்கிறாள். இவற்றைப் பின்வரும் பாடல் வரிகள் தெளிவுறுத்துகிறது.

“ **இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்**

**வல்லதுஅவர்அளிக்கு மாறு”**(1321)

**6. துன்பம்(சோகம்)**

**"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**

**காமம் நுதுப்பேம் எனல்"(1148)**

காதலன் பிரிந்த பிறகு, காதலி தனியே இருந்து நினைந்து நினைந்து துயருறுகிறாள். நாளாக ஆக உயிர் வாழ்வது வெறுப்பழிக்கிறது. துன்பம் அவ்வாறு வரம்பு கடந்து வருத்தும் போது நான் உயிர் வாழ்வதற்கு காரணம் என்ன? அவர் பிரிந்து சென்ற போதிலும் அவரை நினைக்கும் பேறு பெற்று, அவரோடு வாழந்த நாட்களை நினைப்பதில் ஒருவழக ஆறுதல் பெறவே உயிருடன் இருக்கிறேன் என்று துன்ப உணர்வு காலத்திலும் காதலி அறிவோடு எண்ணுகிறாள். இங்கு சோக எனும் ஸ்தாயி புலப்புடுகிறது.

**7. உற்சாகம் (வீர)**

**"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்றலின் நோன்மை யுடைத்து"(42)**

தனித்த வாழ்க்கையில் பல கேடுகள் விளைதலானும் இல்வாழ்க்கையில் அக்கேடுகள் விழைதலின்மையானும் "இல் வாழ்க்கை நோற்றலிக் நோன்மை யுடைத்து"என்றார் திருவள்ளுவர். தனித்த வாழ்க்கையில் தீயொழுக்கப் பெருக்கு வாய்ப்பு நேர்கிறது.

"ஆற்றின் ஒழுக்கி….. இல்வாழ்க்கை"யில் அவ்வாய்ப்பு பெரிதும் நேர்வதில்லை. நல்லொழுக்கத்தை வளர்க்கவல்ல வாழ்க்கை எதுவோ அதுவே வலிமையுடையதாகும்[5.] இவ்வலிமையோடு இல்வாழ்க்கை தொடர்புபட்டிருக்கிறது. இது உற்சாகம் என்னும் ஸ்தாயி பாவத்தைப் புலப்படுத்துகிறது.

**8. விஸ்மயம்( வியப்பு)**

**"குழலினி தியாழினி தென்பதன் மக்கள்**

**மழலைச் சொல் கேளா தவர" (53)**

தம் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேளாதவரே, குழல் இனிது யாழ் இனிது என்று கூறுவர். இளங்காதலர் இருவர்க்கு இன்பமூட்டுவனவற்றுள் இசையும் ஒன்று. குழலிசையும், யாழிசையும் காதலர்க்கு இன்பூட்டுவதில் சிறந்தன. இவை எழுப்பும் இன்பம் இருவர் பேச்சையும் மழலையாக்கும். காதல் கல்வியாய், இன்பமாய் ஒன்றி அமிழ்தக் குழவியாய் முகிழ்கின்றது. முகிழ்ந்த குழவியினின்று மழலை எழுகின்றது. அம்மழலை எத்தகையது? அது குழலையும் யாழையும் வீழ்த்திய இன்பத்தினின்றும் பிறந்ததன்றோ? அது குழலினும் யாழினும் சிறந்து விறங்குதல் இயல்பே. மழலை ஒலியே ஆச்சர்யம் எனும் பாவத்தைப் புலப்படுத்தி பேரின்ப பெற வழி கோலுகிறது. காதலினூடாக இல்வாழ்க்கையின் அறம், விஸ்மயம்(வியப்பு) எனும் ஸ்தாயி பாவத்துடன் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

---

[5]கல்யாணசுந்தரனார.வி, திருக்குறள் இல்வாழ்க்கை, சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை. 1951,ப.424) திருக்குறள் நல்லொழுக்கத்தை வளர்க்கும் காதல் எனும்

இவ்வாறு திருக்குறட் பாக்களில் காதல் அறத்தின் மூலம் ஸ்தாயி பாவம் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

### முடிவுரை

எனவே இங்கு குறிப்பிட்டுள்ள திருக்குறட்பாவில் காதல் அறத்தின் மூலம் பாவ வெளிப்பாடு அதாவது ஸ்தாயி பாவம் (நிலையான உணர்ச்சி) எவ்வாறு குறட்பா மூலம் வெளிப்படுத்தப்படுகிறது என்பது நிரூபணமாகிறது. இல்வாழ்க்கைக்கு தலைவன் தலைவியர் செயற்பாடுகளில் அன்பு, சிரிப்பு, சோகம், உற்சாகம், கோபம், பயம், வெறுப்பு, ஆச்சர்யம் என்பவைகளால் முழுமைப்படுத்தப்படுகிறது. எனினும் இல்வாழ்க்கை அன்பு எனும் காதலில் ஆரம்பித்து வாழ்க்கையின் இறுதி வரை அன்பு எனும் காதல் அறமே நிலை கொள்கிறது. அந்தவகையில் தலைவன், தலைவியரது அன்பு எனும் (ரதி) காதல் அறமானது பரதநாட்டிய நாயகன் நாயகி செயற்பாட்டின் மூலம் பாவ வெளிப்பாட்டிற்கு முன்மாதிரியாக விளங்குவதை அறியக்கூடியதாக உள்ளது.

### உசாத்துணை நூல்கள்

[1] ஜகந்நாதன்.கி.வா,‘‘திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு’’, இராமகிருஸ்ணமிஸன் வித்யாலயம், கோயம்புத்தூர், 1963.

**[2]** கல்யாணசுந்தரனார்.வி,‘‘திருக்குறள் விரிவுரை’’ சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை. 1951.

**[3]** வரதராசன்.மு,‘‘திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்’’, தாயக வெளியீது, சென்னை.1959.

**[4]** நவராஜ் செல்லையா.எஸ்,‘‘ திருக்குறள் புதிய உரை’’, ராஜ்மோகன் பதிப்பகம், சென்னை, 2000.

**[5]** ஶ்ரீராமதேசிகன.எஸ்.என்.,‘‘ பரதநாட்டிய சாஸ்திரம்’’, உலகத்தமிராய்ச்சி நிறுவனம், சென்னை,2001.